# பத்திரிக்கை செய்தி

## வாரிசு சான்றிதழ் வழங்க லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் அப்போதைய கிராம உதவியாளருக்கு 4 ஆண்டுகள் மெய்க்காவல் சிறை

புகார்தாரர் அருள்தரன், மாரியம்மன் கோவில் தெரு, புலிவலம் கிராமம், திருவாரூர் மாவட்டத்தில் வசித்து வந்தார். புகார்தாரர் வாரிசு சான்றிதழ் கேட்டு புலிவலம் கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.பழனி என்ற பழனிவேலு, கிராம உதவியாளர், புலிவலம் கிராமம், திருவாரூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.1,500/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாகப்பட்டிணம் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது கடந்த 23.07.2015 திரு.பழனி என்ற பழனிவேலு, புகார்தாரரிடமிருந்து ரூ.1,500/- லஞ்சப்பணம் பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது திருவாரூர் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 24.03.2025 திரு.பழனி என்ற பழனிவேலு, கிராம உதவியாளருக்கு 4 ஆண்டுகள் மெய்காவல் சிறை தண்டணையும் மொத்தம் ரூ.2,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.